

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.7.2023) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு திரையரங்கம் மற்றும் மல்டிபிளக்ஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.மூர்த்தி, தமிழ் திரைப்பட தயாரிப்பாளர் சங்கத்தின் தலைவர் முரளி என்.இராமசாமி, செயலாளர்கள் எஸ்.கதிரேசன் மற்றும் ஆர்.ராதாகிருஷ்ணன், தமிழ்நாடு திரையரங்கம் மற்றும் மல்டிபிளக்ஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் வி.டி.எல். சுப்பு, செயற்குழு உறுப்பினர் டி.என்.டி. ராஜா, பொருளாளர் சந்திரபிரகாஷ் ஜெயின், தமிழ்நாடு திரைப்பட விநியோகஸ்தர்கள் சங்கத்தின் தலைவர் அருள்பதி, துணைத் தலைவர் கே.ராஜன் ஆகியோர் சந்தித்து கோரிக்கை மனு அளித்தார்கள். உடன் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

# மணிப்பூர்: அணிவகுக்கும் அதிர்ச்சித் தகவல்கள்!

முதல் பக்கத் தொடர்ச்சி

பழங்குடியினப் பெண்கள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக வழக்குகள் பதிவாகியுள்ளன. இதனை அம்மாநில முதலமைச்சர் பிரேன் சிங்கும் உறுதி செய்துள்ளார்.

மே 4ஆம் தேதி நிகழ்ந்த சம்பவத்தைப் போன்ற நூற்றுக்கணக்கான வழக்குகள் நடந்துள்ளன. இதனால்தான் இணையத்தை தடை செய்தோம் என்று அவர் கூறியுள்ளார்.

**தொடரும் வன்முறைச் சம்பவங்கள்!**

மணிப்பூரில் வன்முறையைக் கட்டுப்படுத்தி, அமைதியை ஏற்படுத்த அம்மாநில பா.ஜ.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என தொடர்ந்து குற்றச்சாட்டு எழுந்து வரும் நிலையில், 80 நாட்களைக் கடந்தும் பழங்குடியினச் சமூகத்தை குறிவைத்து வன்முறைச் சம்பவங்கள் இன்னமும் அரங்கேறி வருகின்றன.

குக்கி பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்த 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மணிப்பூரைவிட்டு வெளியேறி, அண்டை மாநிலங்களில் தஞ்சமடைந்துள்ளனர். அவர்களது சொத்துக்கள் சூறையாடப்பட்டு வருகின்றன. இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகள் தீக்கிரையாகி உள்ளன. இதுதொடர்பான தகவல்கள் வெளி உலகிற்குத் தெரியவராமல் பா.ஜ.க. அரசு மூடிமறைப்ப தாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

**அமெரிக்க தூதர் வேதனை!**

“மணிப்பூரில் பழங்குடியினப் பெண்கள் நிர்வாணப் படுத்தப்பட்டு கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட கொடூரத்தைக் கண்டு அமெரிக்க மக்களின் இதயம் நொறுங்குகிறது” என அமெரிக்க தூதர் எரிக் கார்ஸெட்டி வேதனையுடன் தெரிவித்துள்ளார்.

மணிப்பூரில் பழங்குடியினப் பெண்கள் நிர்வாணப் படுத்தப்பட்டு கூட்டு பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம், இந்தியாவை மட்டுமின்றி உலகையே அதிர வைத்திருக்கின்றன. இந்நிலையில், இந்த விவகாரம் தொடர்பாக, இந்தியாவிற்கான அமெரிக்க தூதர் எரிக் கார்ஸெட்டி தனது வேதனையை வெளிப்படுத்தியுள்ளார். மணிப்பூர் கலவரம் இந்தியாவின் உள்நாட்டு விவகாரம் என்றாலும், பாலியல் வன்கொடுமை தொடர்பான அந்த வீடியோவை பார்க்கும் போது, இதயம் நொறுங்குவதாகக் கூறியுள்ளளார். இந்தச் சம்பவத்தில் இந்திய மக்களின் துயரம் மற்றும் மனவேதனையை உணர்ந்து அவர்களுடன் அமெரிக்கா துணை நிற்பதாக அமெரிக்க தூதர் எரிக் கார்ஸெட்டி தெரிவித்துள்ளார்.

**உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி கண்டனம்!**

‘நாட்டுக்கு அவமானமாக இருக்கிறது; மணிப்பூர் மகள்களுக்கு நடந்தது மன்னிக்க முடியாதது’ என்கிறார் பிரதமர் மோடி . ஆனால் மணிப்பூர் முதல்வருக்கு உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை. அனைத்து முதல்வர்களும் மாநிலங்களில் சட்டம் ஒழுங்கை குறிப்பாக பெண்கள் பாதுகாப்பை மேலும் வலுப்படுத்த வேண்டும் என்று பொத்தாம் பொதுவாக கேட்டுக் கொண்டிருக்கிறார்.

இதுவும் கூட உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், “இது நாட்டின் அரசியலமைப்பு மற்றும் மனித உரிமை மீறும் செயல்” என்றும் “இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க சிறிய அவகாசம் தருகிறோம். இல்லையெனில் நாங்கள் தலையிடுவோம்” என்று கண்டித்ததனால்தான். அத்துடன் எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றி ஜூலை 28 அன்று தெரிவிக்க வேண்டும் எனவும் கூறியிருக்கிறார். அதுவும் நாடாளுமன்றம் கூடுவதும் மோடியை வாய்திறக்க வைத்திருக்கிறது.

**தாமதமாக முதல் தகவல் அறிக்கை பதிவு!**

மணிப்பூர் குக்கி பழங்குடியினப் பெண்களை நிர்வாணமாக இழுத்துச் சென்றதும் பட்டப்பகலில் பொதுவில் பாலியல் வன்கொடுமை செய்ததும் அதைத் தடுக்க முயற்சித்த இளம் பெண்ணின் சகோதரனை கொலை செய்ததும் மே 4 அன்று நடந்ததாக செய்தி ஏடுகள் தெரிவிக்கின்றன. ஆனால் 18 அன்றுதான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாகவும் மேகசந்திர சிங் கூறியிருக்கிறார்.

பா.ஜ.க.வின் வெறுப்பு அரசியலும் பிரிவினை அரசியலும்தான் குக்கி பழங்குடியின மக்கள் மீது, மைத்தேயி மக்கள் குழுவினர் இத்தகைய தாக்குதல் நடத்துவதற்கு காரணம் என்பதும் அதனால் பா.ஜ.க. மாநில அரசு கடும் நடவடிக்கை ஏதும் எடுக்கவில்லை என்பதும் ஒன்றிய அரசும் கண்டு கொள்ளாமல் இருந்தது என்பதும் தெளிவானது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் ட்விட்டர் பதிவு!**

இதுகுறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவில்,

**“மணிப்பூரில் பெண்கள்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட வன்முறையால் முற்றிலும் மனமுடைந்து அதிர்ச்சியில் உறைந்து போயுள்ளேன். நமது கூட்டு மனசாட்சி எங்கே போனது? வெறுப்புணர்ச்சியும் நச்சும் மனிதத்தன்மையின் ஆன்மாவையே அசைத்துப் பார்க்கின்றன. இது போன்ற கொடுஞ் செயல்களுக்கு எதிராக நாம் ஒன்றிணைந்து நிற்க வேண்டும்.**

**இரக்கமும், மரியாதையும் கொண்ட ஒரு சமூகத்தை வளர்த்தெடுப்பதை நோக்கிப் பணியாற்ற வேண்டும். மணிப்பூரில் அமைதி திரும்பு வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டும்.”**

- என்று குறிப்பிட்டிருந்ததும் இங்கே குறிப்பிடத் தக்கதாகும்.

---

கோவை வடக்கு மாவட்டம்

## அன்னூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

### தலைமைக் கழக அறிவிப்பு

கோவை வடக்கு மாவட்டம், அன்னூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் அ. சத்யமூர்த்தி அவர்கள், தான் வகித்து வந்த செயலாளர் பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால், கழகப் பணிகள் செவ்வனே நடைபெற மு.தனபாலன், (நெ.12/191எ, செம்மாணி செட்டிபாளையம், ம.க.செட்டிபாளையம் அஞ்சல், ச.சா.குளம் வழி, அன்னூர் தாலுகா, கோவை 641107.) அவர்கள், அன்னூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை 600 018.
நாள் : 21.7.2023.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க

---

## ‘வாட்ஸ் அப்’பில் வந்த தகவல்!

**PRL கடந்த 5 ஆண்டுகளில் பிரதமர் மோடியின் வெளிநாட்டு பயணங்களுக்கு ரூ.254.87 கோடி செலவு: மாநிலங்களவையில் வெளியுறவு அமைச்சகம் தகவல்**

**SPIDER MAN**

---

தாய்மையை நிர்வாணப்படுத்தி தலைகுனிய வைத்தது மணிப்பூர்! தடுக்கத் தவறிய

# ஒன்றிய அரசைக் கண்டித்து - கழக மகளிர் அணி இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

**சென்னையில் - கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமை!**

**“மற்ற மாவட்டங்களில் நாளை (ஜூலை 24) நடைபெறும்” என - தலைமைக் கழகம் அறிவிப்பு!**



சென்னை, ஜூலை 23-

தாய்மையை நிர்வாணப்படுத்தி தலைகுனிய வைத்தது மணிப்பூர்! அதனைத் தடுக்கத் தவறிய ஒன்றிய அரசைக் கண்டித்து தி.மு.க. மகளிர் அணி சார்பில் இன்று (23.07.2023) கழகத் துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் சென்னையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டம் குறித்து தலைமைக் கழகம் விடுத்த அறிவிப்பு வருமாறு:-

பா.ஜ.க. ஆட்சி நடத்தும் மணிப்பூர் மாநிலத்தில் மிகப் பெரிய கலவரம் ஏற்பட்டு பல உயிர்கள் பலியாகின. மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. அரசு கலவரத்தைக் கட்டுப்படுத்த தவறிய நிலையில், சமீபத்தில் பெண்கள் இருவர் நிர்வாணப்படுத்தப்பட்டு வீதியில் ஊர்வலமாக இழுத்துச் சென்று கற்பழிக்கப்பட்ட, மனிதாபிமானமற்ற கொடுமை நிகழ்ந்ததாக, ஊடகச் செய்திகள் தற்போது வெளிவந்துள்ளது. அனைவரின் உள்ளத்தையும் பதற வைத்துள்ளது. தாய்மையை அவமானப்படுத்தும் இந்நிகழ்வுகளை மணிப்பூர் மாநில பா.ஜ.க. அரசு தடுக்கத் தவறி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

இக்கலவரங்கள் நிகழ்ந்த நேரத்தில் அதனைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் பிரதமர் மோடி வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டு வந்தார். ஒன்றிய பா.ஜ.க. அரசும் மகளிருக்கெதிரான இக்கொடுமைகளைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியது.

மணிப்பூர் கலவரம் தொடங்கிய நேரத்திலேயே தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான தளபதி அவர்கள், தனது கண்டனத்தையும், கவலையையும் சமூக ஊடக வாயிலாக வெளிப்படுத்தினார்.

இச்சூழ்நிலையில் பெண்களுக்கு எதிரான நெஞ்சைப் பதற வைக்கும் இக்கொடுமையைக் கண்டித்து, இன்று (23.07.2023) சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே மாலை 4 மணியளவில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

தொடர்ச்சியாக நாளை (24.07.2023 - திங்கட்கிழமை) காலை 10.00 மணியளவில் தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் மகளிர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும். மாவட்டக் கழகச் செயலாளர்கள், மகளிர் அணி அமைப்பாளர்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டங்களை சிறப்பாக நடத்திடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.

# பதிவுத் துறை கட்டடங்கள்: முதல்வர் திறந்து வைத்தார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

மாற்றுத் திறனாளிகளுக்கான சாய்தள நடைபாதை வசதி மற்றும் இதர வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள இவ்வலுவலகத்தில் மொத்தம் 18 அலுவலர்கள்/பணியாளர்கள் பணிபுரிவர்.

**பதிவுத்துறை அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தல்**

தேனியில் 3 கோடியே 51 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பதிவுத் துறை அலுவலகக் கட்டடத்தையும், நாமக்கல் பதிவு மாவட்டத்தில் சேந்தமங்கலம் மற்றும் கன்னியாகுமரி பதிவு மாவட்டத்தில் பள்ளியாடி ஆகிய இடங்களில் தலா 1 கோடியே 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சார்பதிவாளர் அலுவலகக் கட்டடங்களையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

7 புதிய வணிகவரி நிர்வாக கோட்டங்கள், 6 புதிய வணிவரி நுண்ணறிவு கோட்டங்கள், 13 புதிய வணிகவரி மாவட்டங்கள் மற்றும் 2 புதிய பதிவு மாவட்டங்கள் ஆகியவற்றை தொடங்கி வைத்தல்.

செங்கல்பட்டு, திருவள்ளூர், கடலூர், திருவாரூர், திருப்பூர், விருதுநகர் மற்றும் ஓசூர் ஆகிய 7 புதிய வணிகவரி நிர்வாக கோட்டங்களையும், வரி ஏய்ப்பை தடுப்பதற்கு செங்கல்பட்டு, கடலூர், திருவாரூர், திருப்பூர், விருதுநகர் மற்றும் ஓசூர் ஆகிய 6 புதிய வணிகவரி நுண்ணறிவு கோட்டங்களையும், செங்கல்பட்டு, திருவள்ளூர், தாம்பரம், ஆவடி, இராணிப்பேட்டை, திருப்பத்தூர், கள்ளக்குறிச்சி, திருவாரூர், கிருஷ்ணகிரி, சேலம்II, திருப்பூர்III, தேனி மற்றும் தென்காசி ஆகிய 13 புதிய வணிகவரி மாவட்டங்களையும்;

பதிவுத் துறையின் மறுசீரமைப்பு பணிகளின் ஓர் அங்கமாக சென்னை மண்டலத்தில் தாம்பரத்தை தலைமையிடமாகக் கொண்டு தாம்பரம் பதிவு மாவட்டம் மற்றும் கோயம்புத்தூர் மண்டலத்தில், கோயம்புத்தூர் (தெற்கு) பதிவு மாவட்டம் ஆகிய இரண்டு புதிய பதிவு மாவட்டங்களையும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, முதன்மைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் தீரஜ் குமார், வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் திருமதி பா. ஜோதி நிர்மலாசாமி, பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், வணிகவரி இணை ஆணையர் (நிர்வாகம்) திருமதி வே. இரா. சுப்புலெட்சுமி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை விமான நிலையத்தில் 2025 ஆம் ஆண்டிற்குள்

# 3.5 கோடி பயணிகளை கையாள ஏற்பாடுகள்!

**மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்விக்கு- ஒன்றிய அமைச்சர் பதில்!**



*புதுடெல்லி, ஜூலை 23 -*

*தமிழ்நாட்டில் பரந்தூரில் அமையவுள்ள கிரீன்ஃபீல்ட் விமான நிலையத் திட்டத்தை செயல்படுத்துவதற்கான நிதி ஆதாரம் குறித்தும், நிலத் தேவைகளை அரசாங்கம் இறுதி செய்துள்ளதா? என்பது குறித்தும் சென்னை, வேலூர் விமான நிலைய கட்டுமானத்தை விரைவுபடுத்துவதற்கு அரசு எடுத்துள்ள சீரிய நடவடிக்கை விவரங்கள் குறித்தும், சென்னை விமான நிலையத்தில் விமானங்கள், பயணிகள் மற்றும் சரக்குகளை கையாளும் திறனை அதிகரிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்தும் மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார் அவரது கேள்வி வருமாறு:*

*தமிழ்நாட்டில் உள்ள பரந்தூரில் கிரீன்ஃபீல்ட் விமான நிலையத் திட்டத்தை செயல்படுத்த தேவையான ரூ.61,000 கோடி நிதியை நிதியுதவி நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு நிதி நிறுவனங்கள் மூலம் வழங்க ஒன்றிய அரசு திட்டமிட்டு ள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் யாவை?*

*கிரீன்ஃபீல்ட் விமான நிலையத் திட்டத்தை நிறுவுவதற்கான நிலத் தேவைகளை அரசாங்கம் இறுதி செய்துள்ளதா மற்றும் அப்படியானால், அதன் விவரங்கள் யாவை? தமிழ்நாட்டில் உள்ள பாரந்தூரில் கிரீன்ஃபீல்ட் விமான நிலையத்தின் கட்டுமானத்தை விரைவு படுத்துவதற்கு அரசு எடுத்துள்ள சீரிய நடவடிக்கை விவரங்கள்; சென்னை விமான நிலையத்தில் விமானங்கள், பயணிகள் மற்றும் சரக்குகளை கையாளும் திறனை அதிகரிக்க ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள்; வேலூர் விமான நிலைய கட்டுமானப் பணிகள் விரைந்து முடிக்கவும், விமான சேவை நடவடிக்கைகளை தொடங்கவும் அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?*

*இதற்கு விமானப் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் வி.கே.சிங் அளித்த பதில் வருமாறு:*

*இந்திய ஒன்றிய அரசு உருவாக்கிய கிரீன்ஃபீல்ட் விமான நிலையங்கள் (GFA) கொள்கை, 2008 நாட்டில் கிரீன்ஃபீல்ட் விமான நிலையத்தை மேம்படுத்துவதற்கான நடைமுறை மற்றும் நிபந்தனைகளை பரிந்துரைக்கிறது. இக் கொள்கையின்படி, திட்டத்திற்கான நிதியுதவி, நிலம் கையகப்படுத்துதல், R&R போன்ற விமான நிலைய திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பு மாநில அரசு திட்ட ஆதரவாளராக இருந்தால்*

*அந்தந்த மாநில அரசு உட்பட சம்பந்தப்பட்ட விமான நிலைய மேம்பாட்டாளரிடம் உள்ளது. மேலும்,*

*காஞ்சிபுரம் மாவட்டம், பாரந்தூரில் உள்ள கிரீன்ஃபீல்ட் விமான நிலையத்தை மேம்படுத்துவதற்கான முதல் கட்ட அனுமதி, அதாவது ‘சைட் கிளியரன்ஸ்’ வழங்குவதற்கான விண்ணப்பத்தை தமிழ்நாடு அரசு சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகத்திடம் (MOCA) சமர்ப்பித்துள்ளது.*

*தமிழ்நாடு. GFA கிரீன்ஃபீல்ட் விமான நிலைய கொள்கையின்படி, இந்திய விமான நிலைய ஆணையம் (AAI), சிவில் விமானப் போக்குவரத்து இயக்குநரகம் (DGCA) மற்றும் பாதுகாப்பு அமைச்சகம் (MOD) ஆகியோரின் கருத்துக்களுக்காக முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. பங்குதாரர்களுடனான இந்த ஆலோசனையை முடித்த பிறகு, கிரீன்ஃபீல்ட் விமான நிலையங்களுக்கான வழிகாட்டுதல் குழுவின் முன், தள அனுமதி வழங்குவது தொடர்பாக அவர்களின்*

*பரிந்துரைக்காக முன்மொழிவு வைக்கப்பட வேண்டும்.*

*சென்னை விமான நிலையம் உட்பட விமான நிலையங்களில் உள்கட்டமைப்புகள்/வசதிகளை மேம்படுத்துவது என்பது ஒரு தொடர்ச்சியான செயலாகும், இது இந்திய விமான நிலைய ஆணையம் (AAI) அல்லது சம்பந்தப்பட்ட விமான நிலைய ஆபரேட்டர்களால் செயல்பாட்டுத் தேவைகள், போக்குவரத்து தேவை, வணிக சாத்தியம் போன்றவற்றைப் பொறுத்து மேற்கொள்ளப்படுகிறது.*

*இந்திய விமான நிலைய ஆணையமானது சென்னை விமான நிலையத்தை விரிவாக்கம்/மேம்படுத்தும் பணியை ரூ.2467 கோடியில் முதல் கட்டம் மற்றும் இரண்டாம் கட்டம் என தொடங்கியுள்ளது. முதல் கட்டத்தின் கீழ், ஒரு புதிய ஒருங்கிணைந்த முனையக் கட்டிடம் கட்டப்பட்டு, தற்போதுள்ள ஆண்டொன்றுக்கு 23 மில்லியன் பயணிகளில் இருந்து ஆண்டுக்கு 30 மில்லியன் பயணிகளுக்கு உயர்த்திட விமான நிலையத்தின் பயணிகளைக் கையாளும் திறனை மேம்படுத்தும் வகையில் செயல்படுத்தப்பட்டுள்ளது.*

*இரண்டாம் கட்டத்திற்கான கட்டுமானப் பணிகளும் ஜூலை, 2025க்குள் முடிவடைய வாய்ப்புள்ளது. இரண்டாம் கட்டப் பணிகள் முடிந்த பிறகு, விமான நிலையம் ஆண்டுக்கு 35 மில்லியன் பயணிகளைக் கையாள முடியும்.*

*ஆண்டுக்கு 1.7 மில்லியன் மெட்ரிக் டன் கையாளும் திறன் கொண்ட, நவீன போதுமான விமான சரக்கு கையாளும் வசதி சென்னை விமான நிலையத்தில் உள்ளது.*

*நாட்டில் உள்ள சேவை இல்லாத மற்றும் குறைந்த விமான நிலையங்களில் இருந்து பிராந்திய விமான இணைப்பை மேம்படுத்தவும், மக்களுக்கு மலிவு விலையில் விமானப் பயணத்தை மேற்கொள்ளவும், சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம், பிராந்திய இணைப்புத் திட்டம் (RCS) UDAN 21.10.2016 அன்று தொடங்கியுள்ளது.*

*UDAN திட்டத்தின் கீழ் RCS விமானங்களை இயக்குவதற்கான தரம் உயர்த்துவதற்காக வேலூர் விமான நிலையம் வழங்கப்பட்டது. விமான நிலையத்தின் கட்டுமானப் பணிகள் முன்கூட்டியே முடிவடைந்து, விமான நிலையத்திற்கு உரிமம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன. இவ்வாறு வேலூர் தொகுதி திமுக நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் நாடாளுமன்ற மக்களவையில் எழுப்பிய கேள்விக்கு மத்திய விமானப் போக்குவரத்து துறை இணை அமைச்சர் டாக்டர் வி.கே. சிங் எழுத்து பூர்வமாக அளித்த பதிலில் கூறியுள்ளார்.*

---

## ஒழுங்கு நடவடிக்கை ரத்து

### தலைமைக் கழக அறிவிப்பு

கோவை வடக்கு மாவட்டம், அன்னூர் ஒன்றிய முன்னாள் செயலாளர் இ.ஆனந்தன் மற்றும் முன்னாள் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர். நடராஜன் ஆகியோர் தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை 600 018.
நாள் : 21.7.2023.

**துரைமுருகன்**
பொதுச்செயலாளர்,
தி.மு.க